# ...ர்வாள்

...கள்: காஞ்சி. மணிமொழியார் — தனி இதழ் அணு 1¼

...ஞ்செழியன், B. A. (Hons.) — வெளிநாடு அணு 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௮
மார்கழி ௧௯
3—1—48 சனிக்கிழமை

வீச்சு 21


## ...ளம் போன போக்கு

"சூனு மானு"

...!

...முழுக்க தவறு! கவர்
...ரியாரும் தலைவர் பெரி
...துவரை ஒருவர் விட்
...நேர்ந்தது குருகுலப்
...த்தால் என்பது
...ட்சிப் பீடமும் உத்தி
...டலமும் ஆரிய ஆதிக்
...நாட்ட வந்த பலம்
...பாசறைகளாய் மாறி
...இந் நிலை கண்டு
...வதும்பினர் பெரியார்;
... உள்ளம் மகிழ்ந்தார்
...ர்—

...ம் பிரிந்தனர் என்
...! பார்ப்பனீயத்தின்
...பிடியில் கட்டுண்டு
...திராவிடம்—அந்தத்
...ற்கு மீட்சி வேண்

டும்—அதற்கொரு விடுதலைப் போர் தொடங்க வேண்டும் என்று எண்ணித்தான் பெரியார், அத்தகு விடுதலைப் போர்தனைத் துவக்க எண்ணாத—எண்ண முடியாத—எண்ணக் கூடிய பரம்பரையில் தோன்றாத ஆச்சாரியாரை விட்டுப் பிரிந்தார், தனியாக இருந்து போர்க்களம் அமைத்தார், போராடினார் நியாயத்திற்காக, போராடுகிறார் இன்றும்

**என்றெல்லாம்**

கூறுவது தவறு! முப்பது ஆண்டுகளுக்கு முன்னால், தமிழ் நாட்டிலே, ஏகாதிபத்தியத்தின் கொடுங்கோன்மையை எதிர்த்து எழுந்த ஆச்சாரியார்—பெரியார் கூட்டு முன்னணி குலைந்து போனது ஆரியத்தின் ஆர்ப்பாட்டத்தை எதிர்த்தடக்க ஆச்சாரி

## அவர் சூனுமானு அல்ல!

"வால்மீகி இராமாயணத்திற் கட்டிவிடப்பட்ட பொய்க் கதையினை உண்மையென நம்பி, கம்பர், தமிழில் அதனை எடுத்துப் பாடியது, பண்டைத் தமிழாசிரியரது மெய் வழக்கிலேயே பழகினார்க்கு உவர்ப்பினையும் வருத்தத்தினையும் தாராது ஒழியுமோ?

"இவ்வாறு கம்பர் நடவாத பொய்க் கதையாகிய இராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்த்துச் செய்தமையால், வடமொழிப் பொய்வழக்கில் பழகிவிட்ட அவரது நா, அதன்கண் இலக்கியச் சுவை தோன்றக் கூறவேண்டும் இடங்களிலும் பொய்யாவனவே புனைந்து கூறி இழுக்கினார். இங்ஙனமே, கம்பர்க்குப் பின் வந்த தமிழ்ப் புலவர்களெல்லாரும் பொது மக்களை ஏமாற்றுதற்பொருட்டு, பார்ப்பனரும் கோயிற் குருக்கள்மாரும் வடமொழியில் வரைந்துவைத்த பொய்யான புராணங்களையும் தல புராணங்களையுமே பெரும்பாலும் தமிழில் மொழி பெயர்த்து வைத்துப் பண்டைத் தமிழ் மெய் வழக்கினை அடியோடு அழித்துவிட்டனர். இப்பிற்கால மொழி பெயர்ப்பு நூல்களிலும் ஒரோவிடங்களில் இலக்கியச்சுவை காணப்படுமேனும், முதலிலிருந்து முடிவு வரையில் அவற்றின்கட் பொய்யாவனவே தொடுக்கப் பட்டிருத்தலால், அவற்றின் பயிற்சி மக்கட்கு மெய் உணர்வினையும் மெய்யறிவு விளக்கத்தையும் தராது."

—இவ்வண்ணம் கூறியவர் ஆசிரியர் **மறைமலையடிகள்**. அவர் சூனுமானு அல்ல; சைவ சித்தாந்தக் கடல்!

யார் முனையாத காரணத்தால் தான் என்று மொழிவதும் தவறுதான்.

### இருவரும்

பிரிய நேர்ந்த காரணம் என்ன தெரியுமா, உண்மையான காரணம் என்ன தெரியுமா, ஆச்சாரியாருக்கும்பெரியாருக்கும் இடையே இருந்த "காதல் வாழ்க்கை" துண்டுபட்டுப் போனதற்குரிய காரணம் என்ன தெரியுமா?

### வினைவசம்!

ஆமாம், வினைவசம்! வினைவசம்தான் இருவரையும் பிரித்து விட்டது. உயிருக்குயிராய் இருந்த நண்பர்கள் இருவரும் பிரிய நேர்ந்தது விதியின் விளையாட்டால்! இல்லாவிட்டால், அவ்வளவு 'கலந்த கேண்மையராய்' இருந்தவர்கள் — உழுவலன்பும் கெழுமிய நண்பும் உடையவராய் இருந்தவர்கள்— (இதென்னப்பா சூனுமானு, திரு. வி. க. நடை பயில்கிறாய் என்று கேட்டுவிடாதீர்கள், அவர் கோபித்துக் கொள்ளப் போகிறார்!)

### இரு துருவங்களாய்

மாறிவிடுவார்களா? முன் ஜென்மவினை இருவர் செயலையும் கட்டுப்படுத்தி யிராவிட்டால், இருவரும் இரு வேறு பட்டாளங்களைத் தலைமை தாங்கி நடத்திச் செல்வது மட்டுமேயல்லாமல் ஒருவருக்கொருவர் நேர்மாறான — ஒருவருக்கொருவர் முரண்பட்ட இலட்சியங்களை முன் வைத்து தனித்தனியே நின்று தனித்தனி போராட்டங்களை நிகழ்த்துவார்களா? இதில் வினைவசம் இடையவே கிடையாது என்று முடிவுசெய்து கொண்டால், இருவருடைய அரசியல் ஒற்றுமை திடீரென்று பகைமையாய் மாறிவிட்ட காரணந்தான் என்ன?.........

### எனக்குத்

தெரியும், நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்று! சூனுமானுவாயிற்றே நீ! சுயமரியாதை வீரனாயிற்றே! மதம் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை என்று ஊரறிய, உலகறிய, உரத்த குரலில் கூவுபவனாயிற்றே! தலைவிதி தத்துவத்தை அறிவு எனும் சம்மட்டி கொண்டு, ஓங்கியடித்துத் தகர்ப்பவனாயிற்றே! நீயா வினைவசம் பற்றிப் பேசுவது! இதென்னப்பா நியாயம்! இதென்ன முறை என்றெல்லாம் நீங்கள் மடமடவென

### கேள்விக் குறிகளை

என்மீது எடுத்தெடுத்து வீசுவீர்கள் என்று எனக்குத் தெரியும். தெரிந்துந்தான் சொல்கிறேன், ஆச்சாரியார்—பெரியார் பிரிவு விதிவசத்தால் என்று. "என்ன நெஞ்சழுத்தமப்பா உனக்கு! சூனுமானு என்று பெயரையும் சூட்டிக்கொண்டாய்—வினைவசத்தைக் காரணமும் காட்டுகிறாய்.'' என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு!

### ஆனால் ஒன்று!

நான் மேலே சொன்ன கருத்து என் சொந்தக் கருத்தல்ல—என் சொந்தக் கருத்தாக இருக்கவும் முடியாது இது. நான்தான் விதியை நம்பாதவன் ஆயிற்றே! முன்வினை பின்வினை எண்ணங்களை மறுப்பவனாயிற்றே! மோட்சம் நரகம், பாவம் புண்ணியம், ஜீவாத்மா—பரமாத்மா இவ்வளவும்தான் என்னை நெருங்கவே நடுங்குமே! ஆகவே இந்த

### அருமையான

எண்ணத்தை வெ
பெருமை எனக்கில்லை.
"கல்கி" இருக்கிறே
என்னும் புனை பெய
மறைந்திருக்கும் ரா.
மூர்த்தி அய்யரைத்தா
குறிப்பிடுகிறேன்—மறை
ஞன் பாரதிக்கு மணி ம
எழுப்பி என்றும்
புகழை தனக்கும் தன்
தவருக்கும் தேடிக்
மறு மலர்ச்சி எழுத்
தான் நான் குறிப்பிடுகி
ஆச்சாரியார் "உற்சவ
ரால் அவர் "வீதி உலா"
போது, "மூலவராக"
அவருக்குத் தக்க பு
தமிழ் நாட்டில் சேகரித்

### கீழ்ப்பாக்கத்து

வார வெளியீட்டின
யரையே தான் நான் கு
றேன்—அவர் தான்
பெருமைக்கு உரியவர்.
மூன்று வாரங்களாக "
கொரு தலைவர்" என்ற
பில் கவர்னர் ஆச்சாரி
பற்றிய தன் எண்ண
தொடர்ச்சியாக எழுதிவ
அந்தக் கட்டுரையின்
தான் அவர் இப்படிக் கு
டிருக்கிறார். என் செ
உங்கட்கு

### நம்பிக்கை

இல்லையானால் 28-1
வெளிவந்த "கல்கி"யை
இதழைத்தான்!) தயவு
புரட்டிப் பாருங்கள். உ
தெரிந்துவிடும் உங்களுக்

### தெரிந்ததோ

இல்லையோ, உங்கள்
ளைப் பொததிக் கொள்
உடனே பொத்திக் கொ
கள். சென்னை மாநில உ

(11-ம்பக்கம் பார்

# காமதேனு, அமெரிக்காவில்!

## புராணப் புரட்டரின் பொய்யுரை அல்ல!

## நேரில் காணும் நடைமுறை உண்மை!

"சாக்ரடீஸ்"

ல், அமெரிக்க கண்டத்
டமாடுகிறது காமதேனு!
ல்ல, பல நூறு காம
கள் இந்நாள், அங்கு
த் தொடங்கிவிட்டன.
வ பலப்பல அற்புதங்
க்கள் கண்முன்னே நடத்
ட்டுகின்றன.
ற்றின் கண்கள் அமைந்
ம் விதமோ மகாமாயம்!
ன் செவிகளோ மின்சார
பொருந்தியவை!
வ, சோறு கேட்டால்
தரும் ரொட்டியும், பிஸ்
ண்டும், வெண்ணெயும்
ம் என்று வேண்டினால்
மூன்றையும் தரும். புத்
திய உணவு வேண்டு
பதினைந்தே நிமிடங்
ணவு தயாரித்துத் தரும்.
காய் கறிகளின் ருசியும்
யும் கெடாவண்ணம்,
ன் இயற்கை இன்சுவை
வும் மாறாவண்ணம் மிக
ல் அவற்றைப் பக்குவப்
நமக்கு உண்ணத் தரும்.
தண்ணீர், காபி, விஸ்கி,
வேறு பானங்கள் என்
ன தேவையோ அத்தனை
அவற்றால் தர முடியும்.
பில் டிகாஷன் அதிகம்
மா அல்லது சர்க்கரை
ாய் இருக்கவேண்டுமா,
றைய இருக்கவேண்டுமா
பாலே இல்லாமல்
வேண்டுமா (பாலே இல்
பிதானே இக்காலத்தில்
யில் பலரும் அருந்து

கிறார்கள்!) எப்படி வேண்டு மானாலும் சரி, அந்தக் காமதேனுக்களைக் கேட்க வேண்டியது தான் தாமதம், தடையின்றிக் கிடைத்துவிடும்.

செருப்பைத் துடைத்து வண்ணந் தீட்டிக்கொடுத்தல், பூட்சுகளுக்குப் "பாலிஷ்" போடுதல், கெட்டுப்போன பூட்சுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு நல்ல பூட்சுகளைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளுதல், தேவையானவர்களுக்குத் தேவையான சட்டைகள், கோட்டுகள், கைக்குட்டைகள், துண்டுகள் இவற்றையெல்லாம் தேவையானபடி தருதல்—இவ்வளவையும் அந்தக் காமதேனுக்கள் செய்து முடித்துவிடும்—ஒரு சில நிமிட நேரத்தில்!

இன்னொரு வேடிக்கை என்ன தெரியுமா?

விற்பனையாளர்களாகக் கூட வேலை செய்யும் அந்தக் காமதேனுக்கள்!

கடைகளில் அவற்றைக் கொண்டுவந்து நிற்க வைத்துவிட்டால், அவை வியாபாரம் செய்யும். பண்டங்களைக் கொடுத்து, விலையையும் தெரிவித்து, பணமும் பெற்று, சில்லறையும் கொடுக்கும்.

அவற்றை உதைத்தால், அடித்தால், மிரட்டினால், தாக்கினால், திட்டினால், அதற்கெல்லாம் பயந்துகொண்டு அவை பண்டங்களைத் தந்துவிடமாட்டா. பணம் கொடுத்தால்தான் பண்டங்களை வெளியே காட்டும்.

"காமதேனுக்கள்தானே! எவ்வளவு பணமாயிருந்தால் என்ன! அவற்றிற்கென்ன தெரியும்!" என்று எண்ணிக்கொண்டு, பண்டங்கட்கு உரிய மதிப்பினும்பார்க்கக் குறைந்த பணத்தை அவற்றிடம் தந்தீர்களோ, வந்தது மோசம்! சுடுகாட்டிற்குப்போன பிணமாகும் அப்பணம்! கொடுத்த பணமும் திரும்பாது. வேண்டிய பண்டமும் வாராது.

குறைவான தொகையில்லை, சரியான தொகையே தருவோம், ஆனால் செல்லாத காசுகளைத் தருவோம் என்று எண்ணி, கெட்டுப்போன நாணயங்களையோ கள்ள நாணயங்களையோ அவற்றிடம் எவரேனும் தருவராயின், அவர்களுக்கும் அதே கதிதான்.

அந்தக் காமதேனுக்கள் பெரும்பாலும் எந்தக் கடைகளிலும் இருந்து வணிகம் செய்யும், ஆனால் சிறப்பாகப் புத்தகசாலைகளில் அவற்றிற்கு விருப்பம் மிக அதிகம்.

சிறுகதை, கவிதை, நாடகம், இலக்கியம், இலக்கணம் எத்துறை சார்ந்த புத்தகம் தேவையோ அத்துறை புத்தகத்தைத் தரும் வெற்றி அவற்றிற்கு உண்டு.

சென்ற ஓராண்டில் மட்டும் 100,000,000 டாலர்கள் பெறுமானமுள்ள பண்டங்கள் அவற்றால் விற்கப்பட்டுள்ளன. இது கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் ஆகிறது.

40 கோடி ரூபா; சிறு தொகை அல்ல! உலகில் உள்ள எத்தனையோ நாடுகளின் அரசியலாரின் ஓர் ஆண்டு வருவாய் இதைவிடக் குறைவு!

1944—45ம் ஆண்டின் வரவு—செலவுத்திட்டப்படி சென்னை மாகாண அரசியலாரின் வருவாய் 22 கோடி; செலவு 21 கோடி. ஆனால் காமதேனுக்கள் அமெரிக்காவில் விற்பனை செய்துள்ள பண்டங்களின் மதிப்போ 40 கோடி!

ஒரிசா, சிந்து, எல்லைப்புறம், பீகார், பிரார், மத்திய மாகாணம், பஞ்சாப் இத்தனை மாகாணங்களின் மொத்த வருவாயும் கூட, காமதேனுக்களின் இந்த வியாபாரத் தொகையை விடக் குறைவுதான்.

பம்பாய் நகரசபை, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள நகராட்சிகள் அத்தனையிலும் பெரிது. ஆனால் அதன் வருவாயை விடப் பத்து மடங்கு அதிகம் காமதேனுக்கள் அமெரிக்க வணிகர்கட்குத் தேடிக் கொடுத்த தொகை.

அமெரிக்காவில் நிலவும் இக்காமதேனுக்களின் ஆற்றல் நாளுக்கு நாள் வளர்கிறதாம். அவற்றின் விற்பனைத் திறமையும் 'வர்த்தக புத்தி'யும் பெருகுகின்றனவாம். 1950-க்குள் அவற்றின் வணிகத் திறன் ஐந்து மடங்காகப் பெருகிவிடும் என்று அமெரிக்க அறிஞர்கள் கருதுகின்றனராம்.

புத்தக விற்பனை மட்டுமல்ல, (இன்சூரன்ஸ்) உயிர் ஒப்பந்தத் திட்டங்களைக் கூட முடித்து வைக்கின்றனவாம் அவை!

கேட்கக் கேட்க வியப்பூட்டுவனவாய் இருக்கும் அவற்றின் ஆற்றலும் பண்பும் பழக்கமும் வழக்கமும்!

இவ்வளவும் கதை அல்ல! படிப்பவர் வியப்புற வேண்டும் என்பதற்காக இட்டுக் கட்டிக் கூறிய கற்பனைச் சித்திரமும் அல்ல! மேருமந்தர புராணத்திலோ, கம்பன் காதையிலோ, அருணாசல மான்மியத்திலோ, திருவிளையாடல் 'இலக்கியத்'திலோ கலை எனும் மேற்பூச்சுடன் காணப்படும் பொய்யுரைப் பகுதியினின்று அகழ்ந்தெடுக்கப்பட்ட அற்புதச் சரக்குமல்ல. இந்தக் காலத்துக் கம்பர்கள் தீட்டிய வம்பர் புராணமும் அல்ல இவை! இவை உண்மை! அமெரிக்க மக்கள் நேருக்கு நேர் காண்கிற உண்மை! அவர்களின் அன்றன்றாட வாழ்க்கை முறையோடு இரண்டறக் கலந்துபோய் விட்ட நடை முறை உண்மை!

ஆனால் ஒன்று! இவ்வளவு அற்புதங்களையும் செய்கின்ற இந்தக் காமதேனுக்களை அமெரிக்கர்கள் காமதேனுக்கள் என்றழைப்பதில்லை. அவர்கள் அறியார் அத்தகைய சொல் ஒன்று இருப்பதனை! நம்முடைய "பெருமை பொருந்திய பொக்கிஷக் கோட்டடங்களாகிய" புராணங்கள் இன்னும் அங்கெல்லாம் சென்று பரவவில்லை! ஆகவே புராணகாலக் காமதேனுக்கள் வானவீதியில் வட்டமிடுவதையும், வேண்டுவார்க்கு வேண்டுவன தருமாற்றல் அவற்றிற்கு இருப்பதனையும், மனித முகமும் மாட்டு உடலும் நீண்ட இரு சிறகும் நான்கு கால்களும் கொண்டனவாய், தேவாதி தேவர்களுக்கு உற்றுழி உதவும் உயரிய நண்பர்களாய் அவை விளங்குவதையும் அவர்கள் அறிந்தாரில்லை எனவேதான் அவர்கள் அவற்றை **இயந்திரங்கள்** என்ற சர்வ சாதாரணமான சொல் கொண்டு அழைக்கிறார்கள்! ஸ்லாட் இயந்திரங்கள் (Slot machines)—அதுதான்

அவர்கள் அவற்றிற்குச்
யுள்ள பெயர்!

ஏன், இயந்திரங்கள்
சொன்னவுடனே, ஏன்,
படி விழிக்கிறீர்கள்? உ
கண்கள் எதற்காக இ
பிதுங்குகின்றன? உங்கள்
களில் ஏன் இந்தச் ச
குறி? "அடே! இயந்திரம
ஏன் அப்படிச் சொல்லு
கள்? என்ன ஐயப்பாடு
ளுக்கு? என் பேச்சில் நம்
இல்லையா?

அட பாவமே! காம
என்றால் நம்புகிறீர்கள்!
திரம் என்றால் நம்ப மறு
கள்! இல்லாத காமதேனு
யும் செய்யும் என்று எ
கிறது உங்கள் உள்ளம்;
இருக்கும் இயந்திரங்கள்
அற்புதங்களை—அற்புத
என்று இதுவரை நாம்
எண்ணிவந்த சிலசெய்கை
நடத்திக்காட்டும் என்ற
லோ அதில் ஐயம் பிற
உங்களுக்கு.

எனக்குத் தெரியும், உ
தவறு அல்ல இது! ப
நூற்றாண்டுகளாகவே பு
பொய்ம்மையில் பழகிப்
அது காட்டும் திசையை
காட்டும் வான்பொருளாய்
நம்பி, வாழ்க்கை வாழ்வ
என்னும் உயரிய தத்து
மறந்துபோன சமுதா
பிறந்தவர்கள் நீங்கள்! பர
பரம்பரையாக, கலையிலும்
விலும் நாட்டிலும் ஏட்டிலு
தப் பொய்ம்மையையே
ண்டு கையாண்டு தன்னையே
சிதைத்துக்கொண்ட இன
களுடையது! எதற்கெடுத்
முன்னோர் மொழி பொ
அன்றி அவர் மொ
பொன்னேபோற் போற்று
என்று சொல்லிச் சொல்
நம்பிக்கையையும், தைரி
யும், தன் முயற்சியில் ப

ன் மானத்தையும் இழந்து கட்டத்திலே தோன்றிய ழிப் பெருமை' உங்க யது! ஆகவே தான் சக்தியில் மட்டற்ற நம் உங்களுக்கு இல்லை. ன் அறிவு எதனையும் வல்ல பேராற்றல் படைத் ன்ற திண்ணிய எண்ண ங்கள்பால் பிறக்கவில்லை. ல் அத்தகைய எண்ணம் டம் தோன்றவில்லை என் ர விஞ்ஞான அறிவு நாடுகளில் வளராமல் வில்லை; வளர்ந்தது. ் மேலும் வளர்ந்தது. போதகர்கள் திகைக்கும் ற்கு வளர்ந்தது. வேத ந்திகள் அஞ்சி நடுங்கும் ற்கு—பழம் பஞ்சாங்கங் ாழ்பட்டுப் போகும் அள வளர்ந்தது. வளர்ந்தது ற்கான எத்தனையோ அறி ல் ஒன்றுதான் மேலே பொறித்துள்ள ஸ்லாட் ரத்தின் பல்வகைத்

ணிலே பறக்க வானூர்தி தந்தது விஞ்ஞானம்; மிதக்க பெரும் பெரும் ள அளித்தது விஞ்ஞா உலகினைச் சுருக்கி காலத் ந்றக்க கம்பியில் தந்தியும் ல்ப் பெட்டியும் டெலி முறையும் டெலிவிஷன் யும் கொடுத்தது விஞ்

ம் போம் காத வழி என் கட்டை வண்டிகள் இரயிலும் மோட்டாரும் விஞ்ஞானத்தால்; றையை மேலும் இருட் ந்த அகல் விளக்குகள் அழகிய மின்விளக்கு சத் தொடங்கியது விஞ் தால்; கையைப் புண் ந்த எழுத்தாணியும் தப் பாவாது தடுத்த பனை யும் போய், பேனாவும்

அச்சுப் புத்தகமும் வந்தது விஞ்ஞானத்தால்.

எந்த விஞ்ஞானத்தின் பர வுதலால் ஜுரமும் சளியும் ஜன்னியும் பேதியும் சாத்தா னின் சதிகள் என்ற கருத்து மாய்ந்ததோ, எந்த விஞ்ஞானத் தின் சம்மட்டி அடியால் தொட் டதற்கெல்லாம் பரமன் கட் டளை தேடிவந்த பாழும் மடமை தகர்ந்து வீழ்ந்ததோ, எந்த விஞ்ஞானத்தின் பகுத்தறி வுக் கதிர்கள் பாதிரிகளும் முல் லாக்களும் ஜீயர்களும் ஜீவன் முக்தர்களும் புரோகிதர்களும் மதப் புரட்டர்களும் விரித்து வைத்த பழமைத் திரையைக் கிழித்துக்கொண்டு ஒளி வீசிற்றோ, அதே விஞ்ஞானத் தின் அற்புத சக்திதான் ஸ்லாட் இயந்திரங்களையும் உருவாக்கி இருக்கிறது.

"இயந்திரமா! அது மக்களை விழுங்கும் பூதமாயிற்றே" என்று துள்ளிக் குதிப்பவர்கள் சிலருண்டு இங்கு. பஞ்சா லையா! அது சனியின் சேட்டை! என்று உவமை அலங்காரத் துடன் பேசுவர் அன்னார். "எடு ராட்டையை. சுழற்று மீண்டும் மீண்டும்! கேள் அதன் கீதத்தை. ஆனால் திரும்பி யும் பாராதே இயந்திரத்தை" என்று கட்டளை பிறப்பிக்கும் அரசியல் தம்பிரான்கள் மகாத் மாக்கள், இந் நாட்டில்! ஆனால் அமெரிக்கா மகாத்மாக்களின் மடாலயம் அல்ல, மக்களின் உறைவிடம். ஆகவேதான் அங்கு புதுவது புனையும் அறி வியல் அறிஞர்கள் மதிக்கப்படு கிறார்கள், விஞ்ஞானம் வளர் கிறது, பழமை தேய்கிறது.

ஸ்லாட் இயந்திரங்கள் விஞ் ஞானிகளின் அண்மைக் கால ஆக்கம். ஆனால் இதற்குள்ளா கவே அவற்றின் பண்பும் பய னும் மடமடவென வளர்ந்து விட்டன. இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாக ... காவில் உள்ள வணிக நிலையங் ... அத்தனையிலும் விற்பனையாளர் ருக்குப் பதிலாக இந்த இயந்தி ரங்களே பணியாற்றத் தொடங் கிவிடும் என்று அமெரிக்க விஞ் ஞானிகள் கூறுகிறார்கள்.

இந்த இயந்திரங்களில் உள்ள நுழைவாயில் ஒன்றில் குறிப் பிட்ட நாணயத்தைப் போட் டால் குறிப்பிட்ட பண்டங்கள் வெளியே வந்து விழுமாம். குறிப்பிட்ட வளையங்களைக் குறிப்பிட்ட அளவு திருப்பினால் தேவையான அளவுக்குச் சர்க்க ரையும் பாலும் கலந்த காபியும் தேநீரும் கிடைக்குமாம். மற் றும் அதற்குரிய சாவிகளையும் வளையங்களையும் தேவைக்கேற்ற படி திருப்புவதன்மூலம் இக்கட் டுரைத் துவக்கத்தில் குறிப்பிட்ட பண்டங்கள் யாவும் பெற இய லுமாம்.

இந்த நுண்கருவிகள்—கிட் டத்தட்ட மனிதர்களைப் போலவே பணியாற்றுகின்ற இந்த மனித யந்திரங்கள் மிக விரைவில் அமெரிக்க மக்களின் வாழ்க்கைத் துறை ஒவ்வொன்றி லும் புரட்சித்தனமான மாறுதல் களை உண்டுபண்ணிவிடும் என்ப தில் சிறிதும் ஐயமில்லை.

ஆனால் ஐயப்பாட்டிற்குரியது நம் மக்கள், இனியும், ஒரு கையில் தக்ளியும் மறு கையில் பஞ்சாங்கமும் வைத்துக் கொண்டு, 'இயந்திர நாகரிகமே பாபிகளின் தனியுடைமையே' என்ற பரிதாபச் சிந்து பாடிக் கொண்டு, வைதீகம் எனும் நச் சுச் சூழலிலேயே செக்கு மாடுக ளெனச் சுழன்று சுழன்று சீர ழியப் போகிறார்களா அல்லது விஞ்ஞானப் பாதை வழி, "நல் வாழ்வு" எனும் இலட்சியபூமிக் குப் புதுப் பயணம் தொடங்கப் போகிறார்களா என்பதுதான்.

போர்வாள்

3—1—48 சனிக்கிழமை

# கோவைமாநாட்டிற் கூடுவோரே!

தமிழர்தம் புத்தாண்டு பிறக்கும் நேரத்தில் கோவையிற் கூடிடும் தேசீய வாதிகளே, உங்களைத் தான்!

இரும்பு நெஞ்சு படைத்த வெள்ளை ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறை தர்பாருக்கு அணுவளவும் அஞ்சாது நின்று போரிட்ட அடலேறுகளே, உங்களைத்தான்!

குண்டாந்தடி வீச்சு மண்டையைத் தாக்கிய போதும் நெஞ்சு கலங்காது நிமிர்ந்து நின்று, தாயின் மணிக் கொடியைத் தாங்கி நின்ற திருப்பூர் குமரனின் கூட்டுத் தோழர்களே, உங்களைத்தான்!

அலை கடலில் மரக் கலம் செலுத்தி தமிழன் பண்பாட்டை நிலை நாட்டிய தீரன் சிதம்பரத்தின் பரம்பரையினர் யாம் என்று எக்காளமிடும் காங்கிரஸ் இளைஞர்களே, உங்களைத் தான்!

'ஆகஸ்டு புரட்சியில் ஆயிரமாயிரம் ஆபத்துகள் எமைச் சூழ்ந்து நின்ற வேளையிலும் உம்முடன் பணி செய்து கிடப்பதே என்னும் பண்பாடிய வண்ணம் பணியாற்றினோமே அன்றி, அலுப்பும் சலிப்பும், உற்று அடங்கிக் கிடந்தோமில்லை' என்று முழக்கமிடும் மூவர்ணக் கொடியினரே, உங்களைத்தான்!

அன்றொரு நாள் ஆச்சாரியாரின் ஆர்ப்பாட்ட வேடத்தை நாட்டினர்க்கு நன்குணர்த்தி வைத்த காமராஜரே, தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவரே, உங்களையும் தான்!

"பணமூட்டைகளைப் பிடித்துக் குலுக்குவோம்; பாட்டாளிகளை வாழ்க்கையின் கூட்டாளிகள் ஆக்குவோம்" என்று சமதர்ம முரசு கொட்டுகின்ற வல்லத்தரசுகளே, எவர்க்கும் வளையாத வீரர்களே, உங்களையும் தான்!

தமிழ்நாடு தமிழருக்கே என்று "யாரோ சில வகுப்பு வாதிகள்" இட்டு வந்த "காட்டுக் கூச்சலை" தேசீய முகாமுக்குள்ளேயே எழுமாறு செய்து விட்ட சிவஞானங்களே, நண்பர்களே, உங்களையுந்தான்!

கோவை மாநாட்டிற் கூடிட இருக்கும் தமிழ் மாகாண காங்கிரசைச் சேர்ந்த தலைவர்களே, தளபதிகளே, கலைஞர்களே, தொண்டர்களே, தோழர்களே, வீரர்களே, வீராங்கனைகளே, உங்கள் எல்லோரையுந்தான் அழைக்கிறோம், இங்கு வாருங்கள், ஒரு சிறு வார்த்தை, கேளுங்கள், பின் உங்கள் உள்ளம் உரைக்கும் வழியே நீங்கள் செல்லுங்கள்.

தமிழர் இல்லந்தோறும் இன்பப் பால் பொங்கி வழிந்த வேளையிலே உங்கள் மாநாடு கூடுகிறது. மகிழ்ச்சியும் மன நிறைவும் வீட்டுக்கு வீடு துள்ளிக் குதித்துத் தாண்டவ மாடிடும் நேரத்திலே உங்கள் விழா நடைபெறுகிறது. மஞ்சளும் இஞ்சியும் வாழையும் கரும்பும் செந்நெல் அரிசியும் தீங்கனி பிறவும் தமிழ் நெஞ்சில் களிப்புக் கனலேற்றிய சமயத்திலே உங்கள் பெருங் கூட்டம் நிகழ்கிறது. இந்த மகிழ்ச்சியும் மன நிறைவும் தமிழகத்தில் 'ஒரு நாள்

விழா' வாக இல்லாமல்
பெற்ற நல்லிசையாக
வேண்டாமா! தமிழ் நா
தமிழர் தலை நிமிர்ந்து வாழ
வகுப்பது உங்கள் கடமை
லவா! அதை நீங்கள்
வேற்ற வேண்டாமா!
பெனில் ஒரு சொல்
கள்.

சீமைத் துரை அதிகார
உரம் படைத்த உள்ளத்
எதிர்த்து நின்று போரிட்
ஆதிக்க வெறி பிடித்த சா
த்தைச் சட சடெனச் சா
லே முன்னணி வீரரென
கள். இலண்டன், மேலா
கொள்வதா, அதன்முன்
கட்டி நாம் நின்று வாழ்
என்று கொதிப்போடும்
தோடும் கேட்டீர்கள்.
கொதிப்பும் கோபமும் நி
னவை. அவை வெல்
ஆறாயிரம் கல்லுக்கு அ
உள்ள அதிகார பீடத்
நமக்கும் இடையே
ஆணவச் சங்கிலி அ
அந்த ஆதிக்க வா
கொட்டமும் அடங்கிற்
நியத் துணைக்கண்டம், த
ந்ததலையைத தூக்கவும்
நம் உள்ளம் இன்பத்தால்
வும் ஆயிற்று. தன்
வளையை இறுகக்
கொண்டிருந்த பிரிட்ட
தின் பிடி தளர்ந்த
எவரே மகிழார்?

மகிழ்ந்தோம்; மனம்
தோம்; ஆநந்த சுதந்தர
விட்ட தென்று ஆரவ
ஆர்ப்பாட்டமும் புரிந்
அது வரையில் சரி.
இன்று, தமிழ் நாட்டின்
பிறந்த பொன்னாட்டின்
தென்னாட்டின் நிலை என்
எங்கள் தலைவர் பெ
உங்களுடைய முன்னாள்
அடிக்கடி எடுத்து உ
போலவும், உங்களிலே

ர் சென்ற ஓராண்டாகவே
சு நொந்து நலிவது
லையும், தெற்கு, வடக்குக்
தலைதாழ்த்திக் கரம் குவித்து,
டியேனுக் கடியேன் நான்
ண்டரடிப் பொடியேன்''
று மெல்லக் குறிப்பிட்டு
டியிட்டு வாழ வேண்டிய
ானே இன்று உள்ளது?

ரசியல் ஆக்க மன்றத்தில்
ன் குரல் உண்டா? அங்
ள தமிழ் உறுப்பினர்கள்
ர் உரிமைபற்றி ஒரு நாளே
பேசியதுண்டா? பேச
யுமா? பேச விடுவாரா வட
டவர்? அந்த கன்னடத்
பேசிய திராவிட நண்ப
ருவரை மூன்று திங்களுக்கு
ல் எள்ளி நகையாடவில்
ா அந்த மன்றத்தில் வீற்றி
ும் வடநாட்டு நண்பர்கள்?

சன்னை சட்டமன்ற காங்கி
குழுவினரும் தொட்டதற்
லாம் வடநாட்டுக் காங்கிர
தாக்கீது என்ன என்று
ன எதிர்பார்த்துத் தன்
யாற்றத் தொடங்குகின்ற
மறைந்துபோன பிரகாசம்
சியிலும் இன்று வாழும்
ுாரார் ஆட்சியிலும் இதற்
ஆதாரங்கள் ஏராளம் அல்
?

ன்னாட்டில் உள்ள அரசி
இயக்கங்கள் அத்தனையும்
முகமாக ஆதரிக்கும் ஜமீன்
ும் ஒழிப்பு இன்று ஒத்
பாடப் பட்டதற்குக் கார
வடநாட்டவர் குறுக்கீடு
ா?

றா ஏமாந்த காலத்தில்
் கொண்ட' ஜமீன்தார்
்தார்கட்கு நஷ்ட ஈடு தரு
தவறு என்று திராவிடம்
ுரலில் முழங்கும்போது,
ன மாநில அரசிய
குறித்த தொகையை

யும் பார்க்க இருமடங்கும் மும்மடங்கும் மிகைப்பட்ட தொகை கொடுக்கவேண்டுமென கட்டளை பிறப்பித்தது டில்லிதானே?

உண்பொருள் பங்கீடும் கட்டுப்பாடும் இந்நாள் எடுபடக் கூடாது என்று சென்னை அரசியலார் கூறிக்கொண்டிருந்தவேளை "எடுத்தெறி, அவ் விரண்டையும்" என்று ஒரு தாக்கீது தோன்றியதும் விந்தியத்திற்கு அப் பக்கம் இருந்துதானே?

"நெல்லுக்கு விலை, கூட்டித் தரவேண்டும்—அப்போதே உழவர்க்கு உழுவதில் ஓர் பற்றும் தோன்றும்" என்று முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமியார் கூறிய ஞான்று "அது கூடாது, முடியாது, ஆகாது, நடவாது" என்றெல்லாம் ஆர்ப்பாட்ட வேடம் பூண்டு, அமைச்சர் கருத்தைச் சிதைத்தவரும் ஒழித்தவரும் "மேலிடத்து" மன்னர்கள்தாமே?

இதற்கெல்லாம் என்ன பொருள்? தமிழகத்தில் உரிமை தவழ்கிறது என்று பொருள்? தென்னாட்டில் விடுதலை ஒளி தோன்றிவிட்டது என்று பொருள்? எல்லாரும் ஓர் விலை, எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்று பொருள்? வடக்கு உயர்ந்தது, தெற்கு தாழ்ந்தது என்றல்லவோ பொருள்?

எந்த ஆச்சாரியாரை உங்கள் உள்ளம் வேண்டாம் என்று வெறுத்துத் தள்ளிற்றோ அவரைத்தான் சுந்தர புருஷன் என்று சொல்லி இமயத்தின் உச்சியில் எடுத்து நிறுத்திற்று வடநாடு.

எவருடைய தலைமை தமிழ் நாட்டிற்குக் கூடாது என்று உங்களால் அழுத்தந் திருத்தமாகக் கூறப்பட்டதோ, எவருடைய போக்கு ஆகஸ்டுப் போராட்டத்தின்போது ஊழியர் நம்பிக்கையை இழந்து விட்டது என்று உங்களால் உரைக்கப் பட்டதோ, எவருடைய சூழ்ச்சியையும் வினைத்திறனையும் நீங்கள் துச்சமென ஒதுக்கித் தள்ளினீர்களோ, எந்தத் தலைவரிடம் தமிழகத்தின் "பிடி" சிக்கினால் தமிழகம் சிதைந்துபோய்விடும் என்று நீங்கள் அஞ்சினீர்களோ, அதே தலைவரைத்தான் தெரிந்தெடுத்துக் கைலாகு கொடுத்துக் கவர்னராக்கிற்று, ஏன், கவர்னர் ஜெனரலும் ஆக்கிற்று வடநாடு.

எவர் உங்கள் அன்பையும் ஆதரவையும் கவர்ந்துகொண்டு திருப்பரங் குன்றமேறி நின்றுமீரா அவரையும் அவர் குழுவினரையும் சதிகாரக் கும்பல் என்று நெஞ்சம் நடுங்கும் முறையில் பழி கூறிற்று வடநாடு

அதே வடநாட்டுடன்தான் நீங்கள் இன்னமும் இணைந்து கொண்டிருக்கிறீர்கள்.

அந்த வடநாடேதான் இன்னமும் உங்களைக் கீழிருத்தி, தான், மேலிருந்து கொண்டு, புதிய ஏகாதிபத்திய முறையில் பழைய ஆண்டான் அடிமைத் தத்துவத்தை நிலை நாட்டிக் கொண்டிருக்கிறது.

டில்லி செங்கோல்தான் உங்களை ஆட்டுவிக்கிறது; உங்களை மட்டுமா, தமிழகத்தையே ஆட்டுவிக்கிறது; தமிழகத்தை மட்டுமா, தென்னாடு முழுவதையுமே 'பலமான மத்திய சர்க்கார்' என்னும் மாயமான் வேட்டை காட்டி, ஆட்டுவிக்கிறது.

விடுதலை கிடைத்தது உண்மைதான்; ஆனால் அந்த விடுதலை

யைத் தட்டிப் பறித்துக்கொண்டது வடநாடு.

உரிமை எனும் வெண்ணிலா விண்ணிலே வட்டமிடத் தொடங்கியது மெய்தான். ஆனால் அந்த முழு நிலவின் தண்ணொளி நம் தாயகம் முழுவதும் பரவா வண்ணம் தடுத்துக் கொண்டிருக்கின்றன வடநாட்டுக் கார் மேகங்கள். இம் முகிலைக் கிழித்துக் கொண்டு வெளிவர வேண்டும் அந்த முழுமதி. அப்போது தான் அதன் அழகு பூரணத்துவம் பெறமுடியும்-அதற்குமுன் பெறுவதென்பது இயலாது.

சிங்க ஏறுதான் தமிழகம். ஆனால் அது சிறையில் அல்லவோ சீரழிந்து கிடக்கிறது!

வேங்கைக் காடுதான் நம் நாடு. ஆனால் இங்கு சிறு நரிகள் அல்லவோ ஆட்சிக் கூடாரம் அடித்துவிட்டன!

"மானமொன்றே நல் வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த நம் தமிழ் வேந்தர் பூனைகள் அல்லர்; அவர் வழி வந்தோர் புலி நிகர் தமிழ் மாந்தர்!"—ஆம்! அவர் அத்தன்மையர்தாம். ஆயினும் அவர்தம் கைகளிலும் கால்களிலும் இடப்பட்டுள்ள இருப்பு விலங்குகள் தகர்க்கப்படா முன்னம் அவர் என் செய்வர்?

உங்களைத்தான் கேட்கிறோம்; வெள்ளையர் ஆட்சியை வீழ்த்த முனைந்து நின்ற உங்கள் உள்ளங்களைத்தான் கேட்கிறோம்; உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்று கவிபாடிய உங்கள் மன உறுதியையும், தியாகச் சிந்தையையும், தீரத்தையும், வீரத்தையும் முன் நிறுத்தித்தான் கேட்கிறோம், தமிழர் வாழ்வு அடிமை வாழ்வாய் இருக்கக்கண்டும் உங்கள் தோள் துடிக்கவில்லையா? முச்சங்கம் கண்டு முத்தமிழ் வளர்த்த மூவேந்தர்களின் பரம்பரைக்கு இந்த அவல நிலை ஏற்கும் என்ற எண்ணமா? கங்கை கொண்டானையும் ஈழம் வென்றானையும் இமயவரம்பனையும் ஆரியப்படை கடந்தவனையும் அடுத்தடுத்துத் தோற்றுவித்த அதே இனத்தவர்க்கு இந்த நிலை ஏற்படக் கண்டும் நீவிர் ஓய்ந்திருத்தல் நீதியா? இது முறையா? தமிழ்க் குடியில் பிறந்தவர்க்கு இது ஆகுமா? வெள்ளையரை விரட்டிய வீரர் எனும் விருது பெற்றவர்கள் வடநாட்டுக் கொள்ளையரை மட்டும் விட்டுவைக்க ஒப்பி நிற்றல் அறமா! அல்லவே! ஆகவே தான் கூறுகிறோம்:

கோவையிற் கூடிடும் தேசிய வாதிகளே, சற்றே சிந்தித்துப் பாரீர், தமிழ் நாட்டின் தனி உரிமையை நிலைநாட்ட வாரீர், திராவிடக் கூட்டாட்சியின் இன்றியமையாமையைக் காணீர், அது வேண்டுவதுதான் என உ[...] உள்ளம் உரைத்திடுமாயின் [...] விடநாடு திராவிடருக்கே எ[...] இலட்சிய கீதத்தை முழங்[...] தயங்காதீர்.

தென்னாட்டின் விடு[...] போர் உடனடியாகத் தொ[...] கப்படவேண்டிய தீர வேண்[...] அதற்குரிய போர்க் கொடி[...] நீவிர் உயர்த்துவதாயின், நல்[...] எம்மனோர் நும் பின் வ[...] அணி அணியாக. இல்லை, [...] உயர்த்துவதே முறை எனி[...] சரியே, உயர்த்துகிறோம், [...] ரெலாம் வாரீர் போர்க்[...] திற்கு.

போர், இனிய தமிழகத்[...] அதை உள்ளடக்கிய [...] விடத்தை அடிமைச் சூழலி[...] றும் மீட்பதற்கு! போ[...] நோக்கமும் விளைவும் இரு[...] கும் பொது, ஆகவே எம் க[...] சரி என்று படுமாயின் எம்மு[...] கை குலுக்க வாரீர், இ[...] செல்வோம் போர்ப் பாதை[...]

---


போர்வாள்

# பொங்கல் மலர்

**பக்கம் 60** **விலை அணா 8**

தனிப்படி வேண்டுவோர் 0-9-0 தபால் தலை அனுப்பவும்.

**சிறந்த கதைகள், கட்டுரைகள், கவிதைகள் கொண்டது.**

**அழகிய அமைப்புடையது.**

விற்பனையாளர்கள் தேவையான படிகளுக்கு படிக்கு 4 அணா வீதம் முன் பணம் அனுப்பி பதிந்து கொள்ளவும்.

சொற்ப படிகளே அச்சிடப் படுகின்றன வேண்டுவோர் உள்ளூர் விற்பனையாளரிடமோ அல்லது நேரில் எம்மிடமோ பதிந்துகொள்ளவும்

**"போர்வாள் நிலையம்"**

147, பவழக்காரத் தெரு, சென்னை 1.

## சாவேரி ராகம்

ம் பக்கத் தொடர்ச்சி)

சமும் உல்லாசமும் அவளை
லாயின. என் கைவிரல்
ழலை இசைத்தன. கண்கள்
யின் முகத் தோற்றத்தில்
அலையாக எழும்பிவந்த
சியின் மெய்ப்பாடுகளைக்
கண்டு களித்தன.
மோ குழலிலிருந்து கௌரியி
ம் கௌரியினிடமிருந்து
னிடமும் மாறி மாறிப்
ம் செய்துவந்தது. இசை
இனிமையால் மேலும் மேலும்
ம் மலர்ச்சியும் பெற்றுவந்த
யின் முகம் சற்று நேரத்திற்
ரம் பரிபூரண அழகுடன்
ளி வீசித் திகழ்ந்தது.
காட்சியைக் கண்கள்
தும், உள்ளம் கண்வழியே
ம் செய்து கௌரியினிடமே
ட்டது. கைவிரல்கள் தம்
மயை மறந்துவிட்டன.
ம் கை தவறிக் கீழே வீழ்ந்து
து அதைக்கூட நான்
க்கவில்லை. அவளுடைய
கைக் கண்டு, அவள் நோய்
தாடிவிட்டது என்றெண்
காண்டு, களிப்புக் கடலில்
ாடத் தொடங்கிய என்
சைச் 'சற்றே நீ பொறு'
கையமர்த்திவிட்டு "கௌரீ,
!" என்று மெல்லக் கூப்
ன். கௌரி பேசவில்லை.
யின் நெற்றியில் கை வைத்
பார்த்தேன். இமயத்தின்
போல் ஒரே குளிர்ச்சி. அந்
ளிர்ச்சி என் கையைச் சுட்
கையை மட்டுமா, உள்ளத்
சுட்டது. சுருண்டு போய்விட்
நான். கௌரி, இறந்து
விட்டாள்!

, அவள் என்னை ஏமாற்றி
ள். "என் அன்பே, நீ
பாடு" என்று எனக்குச்
விட்டு, நான் குழல்
டு கவி பாடிக்கொண்டிருந்த
தில், அவள் என்னை விட்டுப்
தோடிப் போய்விட்டாள்.
ி ராகம் பாடிக்கொண்
தேன் நான். புன்னகை
முகத்துடனே அவள் பரந்த
டையே நிரந்தர கீதம்
க்கப் போய்விட்டாள்.
உள்ளத்தில் இன்பச் சுடர்
ந்த ஒளி விளக்கு அணைந்து
விட்டது; வறண்ட பாலைநிலத்தில் அன்புநீர் பாய்ச்சிவந்த தண்புனல் ஓடை மறைந்துவிட்டது; பார்க்கும் விழி தன்னை விட்டுப் பாயும் ஒளி மறைந்துவிட்டது; தேயும் மதுவை இங்கிருத்தி அதில் தோன்று சுவை அங்கே சென்றது; கவிதை ஓவியம் இங்கிருக்க அதிற் காணும் இன்பம் பறந்துவிட்டது. கௌரி போய் விட்டாள். போனவர் மீண்டு வாராத இடத்திற்கு அவள் போய் விட்டாள். என்னைத் தனியே விட்டு விட்டு அவள் மட்டும் போய் விட்டாள். எனக்காகத்தான் சொந்த ஊரைத் துறந்து, சொத்து சுகத்தை மறந்து, பெற்ற தாயைத் தந்தையையும் நினையாது, உற்றார் உறவினரையும் எண்ணாது இந்தச் சிற்றூருக்கு வந்தாள். என்னோடு வாழத்தான் வந்தாள். வந்தவள் சென்றுவிட்டாள்—வந்த இடத்திற் கல்ல, வான வீதியிலே உலவ! காற்றின் அசைவிலே மகிழ! நீரின் தண்மையில் தவழ! அனலின் வெம்மையில் மகிழ!

கௌரி—என் வாழ்வின் விளக்கம்—இனித் திரும்பி வாராள். வந்தெனக்கு வாழ்வளிக்க மாட்டாள். வாழ்வளிக்கும் எண்ணந் தான் அவள்பாலில்லை.

கௌரி—தூய்மையின் வடிவம்—காதலின் மேன்மை—அன்பின் எல்லை—வரையாத ஓவியம்......... அவள் அன்று கண்களை மூடிக் கொண்டாள். அந்தக் கண்கள் இனி என்னைப் பார்க்க மாட்டா. அவள் கரம், அவள் இறுதி எய்திய போதும் என்னை அணைத்தபடி இருந்தது—ஆனால் அந்தக் கரம் வாழ்க்கையில் இனி என்னைத் தூக்கிவிடப்போவதில்லை"

* * *

அத்துடன், அவர், தான்சொல்லி வந்ததை நிறுத்தினார். அவர் கண்களில் நீர் வழிந்தோடியது. எங்களுடைய கண்களிலும் நீர் துளித்தது.

"பிறகு என்ன நடந்தது?" என்று அவரைக் கேட்டோம்.

"என்ன நடந்திருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?" என்று எங்களையே கேட்டார்.

பதில் சொல்ல முடியாமல் விழித்தோம். பிறகு அவரே சொன்னார்.

"உண்மையில் பிறகுதான் என் வாழ்க்கையில் உண்மையான மறுமலர்ச்சி ஏற்பட்டது. ஒரு நாள் அந்த ஊரிலேயே உள்ள ஒரு வாராவதியின்மீது உட்கார்ந்தவாறு வருங்காலத்தில் என்ன செய்வது என்று எண்ணமிட்டபடி இருந்தேன். ஒரு வண்டி எதிரில் வந்துகொண்டிருந்தது. அதனுள் யாரோ கிடத்தப்பட்டிருந்தார்கள். சூழ்ந்து வந்துகொண்டிருந்தவர்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டும் அழுதுகொண்டும் இருந்தனர்.

வண்டி அருகில் வந்ததும் உள்ளே இருந்த உருவம் தெரிந்தது. யாரோ ஒரு பெண் நினைவிழந்து கிடந்தாள். அவளுடைய புடவையெல்லாம் குருதி வெள்ளத்தில் நனைந்து கிடந்தது.

விசாரித்ததில் அவள் ஆலையில் வேலை செய்பவள் என்றும், கர்ப்பிணி என்றும், வறுமையினால் போதிய உணவின்றிச் சோர்வுற்று, வேலை செய்து கொண்டிருக்கும் போதே மயக்கமாய் விழுந்ததால் இயந்திரத்தில் சிக்கிக் கொண்டாள் என்றும் கூறப்பட்டது.



அந்தச் செய்தி மின்னல் வேகத்தில் என் உடலெல்லாம் உள்ளமெல்லாம் பாய்ந்தோடியது.

கௌரி மட்டும் சூல் கொண்டிருக்கவில்லை! அவளும் தான்!—தொழிற்சாலையில் வேலை செய்யும் அவளும் தான் சூல் கொண்டாள்! வறுமை கௌரியைக் கொல்லுவதற்கு மட்டும் காரணமாயிருக்கவில்லை—இன்று தொழிலாளி வர்க்கத்தையே கொஞ்சம் கொஞ்சமாக எலும்புருக்கி நோயைப் போலச் சாகடித்துக் கொண்டு வருகிறது.

இதுதான் இன்றைய உலக நிலை, என்பது எனக்கு விளங்கியது.

என் சிந்தனை சொல்லிற்று:

இன்றைய சமுதாய அமைப்பு ஒரு பலி பீடம். அதில் ஒரு கௌரி மட்டும் சாகடிக்கப் படவில்லை. நாளுக்கு நாள், மணிக்கு மணி, விநாடிக்கு விநாடி, ஆயிர மாயிரம் கௌரிகள் இந்தப் பயங்கர பலி பீடத்திற்கு இரையாகி வருகின்றனர்—இல்லை—இரையாக்கப்படுகின்றனர்.

மக்கள் மன்றத்தில் இன்பம் அரசோச்ச வேண்டுமானால், இல்லாமையும் போதாமையும் இனி இவ்வுலகிடை இல்லாமற் போக வேண்டுமானால், பசியும் பிணியும் பகையும் நீங்கி வளமும் வாழ்வும் அமைதியும் ஓங்க வேண்டுமானால், இந்தப் பலிபீடம் சுக்கு நூறாக உடைத்தெறியப் படவேண்டும்.

எந்தச் சமுதாய அமைப்பு 'கௌரி'களின் குருதி வெள்ளத்தின் மீது உயரப்பர்களின் வாழ்க்கைப் படகுகளை ஓட்ட எண்ணுகிறதோ—எந்த "மேல்—கீழ்" உணர்ச்சி ஒரு சிறு கூட்டத்தாரை மேலுக்கு உயர்த்தவும் மற்ற பெருங் கூட்டத்தாரை என்றென்றும் மீள முடியாத அடிமைப் படுகுழியில் வீழ்த்தவும் முனைந்து நிற்கிறதோ, எந்த சாதிப் பிரிவுகளும் சமயப் பிணக்குகளும் "அன்று எழுதிய எழுத்து"களும் பாட்டாளிகளின் வாழ்க்கை முன்னேற்றத்தை அணை போட்டுத் தடுக்கின்றனவோ, எந்த முதலாளித்வமும் புரோகிதத்வமும் மக்கட் கூட்டம் வறுமையில் உழல்வதைக் கண்டு எள்ளி நகையாடுகின்றனவோ அவற்றை ஒழித்தே தீர வேண்டும்.

மூட நம்பிக்கையிலும் அறிவீனத்திலும் உழன்று உழன்று, தன் வாழ்க்கையை வதைத்துக் கொண்டு, பிறர் வாழ வழி வகுக்கும் உழைப்பாளியின் உள்ளத்தைத் தட்டி எழுப்ப வேண்டும். அந்த உள்ளத்தின் உள்ளே உறைந்து போயிருக்கும் தலைவிதித் தத்துவத்தை அங்குநின்று துரத்தி அடித்து, இனி எந்நாளும் அங்கு மீண்டும் எட்டிப் பாரா வண்ணம் இருக்குமாறு வழி செய்தல் வேண்டும். பின்னே அந்த உள்ளத்திற் கிளர்ந்தெழும் புது உறுதி என்னும் அடிப்படைமீது எல்லார்க்கும் எல்லாமும் இருப்பதான புது வையம் தோன்றும். அங்கே இது எனது . என்னுமோர் கொடுமை இருக்காது. . வீணில் உண்டுகளித்திருப்போர்க்குக் கொஞ்சமும் இடம் இருக்காது. எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க ஏறுகள் ஏங்கிடும் அமைப்பு இருக்காது. புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே ஒரு புதரினில் தூங்கிடும் பேதமை இருக்காது. இலையே, உணவிலையே, கதி இலையே எனும் எளிமை துளியளவும் அப் புது வாழ்க்கை நிலையத்தில் இருக்காது.....

என் சிந்தனை அலைகள் ஓய்வதற்குள் அந்த வண்டி வெகு தூரம் போய்விட்டது.

வாராவதியை விட்டு எழுந்தேன். புது மனிதனானேன். அன்று நான் கனவு கண்ட இலட்சிய உலகத்தை அமைக்கும் புரட்சிப் பாதையில்

முன்னமே வெகு வே
சென்று கொண்டிருக்கும்
கச் சிற்பிகளின் இயக்க
என்னாலான பணி புரிவது
சூளுரைத்துக் கொ
அன்று தொடங்கிய ப
தான் இன்றளவும் இயன்ற
செய்து வருகிறேன். நேரம
நான் வருகிறேன்."
சொல்லிவிட்டு, மடமட
நடையைக் கட்டத் தொட
அந்தக் கிழவர்.

நாங்களும் எழுந்தோம்.
நெடுநேரம் ஆகிவிட்டதை உ
தோம். தூக்கம் வேறு கண்
சுழற்றியது, கொட்டாவி
வாறு வீட்டைநோக்கிப் பு
டோம்.

கொஞ்ச தூரம் சென்றது
வின் இசை மிதந்துவந்தது
செவிகளில் விழத் தொட
அது சாவேரி ராகமாகத்தான்
தது. ஒருக்கால், விடைபெ
சென்ற அக் கிழவர் மீ
அதே இடத்திற்கு வந்து
பாடத் தொடங்கிவிட்டாரோ,
லது, முன்னே அவர் குழலி
ஊறித் திளைத்த எங்கள் உ
ஒவ்வொன்றும் தனக்குத்
அந்தப் பண்பாடத் தொட
டதோ, உண்மை தெரியவி
ஆனால் இசையின் இனிமை
கள் ஒவ்வொருவர் உள்ளத்
தன்னோடு இணைத்துக் கொ
என்பது மட்டும் உண்மை.

(முற்றிற்று.)

## கைகண்ட பலன்!

சர்க்கரைப் பங்கீடு இருந்தபோது
சர்க்கரை விலை
**வீசை ரூ. 0-15-6**

சர்க்கரைப் பங்கீடு போனபின்
சர்க்கரை விலை
**வீசை ரூ. 1-8-3**

இந்த விலையும் அரசியலாரே இன்று ஏற்படுத்
யுள்ள விலை. பங்கீடு போகவேண்டும் போகவேண்
டும் என்று பேசினார்களே தேசபக்தர்கள், பங்கீ
போனதால் வந்த பலன் இது!

-பக்கம் தொடர்ச்சி)
சரின் ஆணை இது. டாக்
ப்பராயன் அவர்களின்
கட்டளை இது! நம் மக்
முக்கையில்

யூய

மே அல்லாமல் துன்பம்
ல் கூடாதென்னும் நல்
த்தால் தூண்டப்பட்டு
றப்பித்துள்ள தாக்கீது
ம் பெற்றுள்ள விடுதலை
ர் எவராலும் பறிக்கப்
நின்று நிலவ வேண்
ன் னும் பற்றுள்ளங்
அவர் தந்துள்ள ஆய்
து. பறங்கிப் பேட்டை
வேறு கழகங்களின் சார்
க்தப்பட்ட

விழா'வில்

மை தாங்கும் பேறு'
அவர். அப்போது
ந்த எண்ணம் தோன்
அவருக்கு. பொதுக்
தில் சொல்லவும் தவற
நினை. அவர்

டிச் சொன்னார் தெரி
இதோ அவரே பேசு
ளுங்கள்: "இந்திய
ல் நாம் எல்லோரும்
டு தோள் போட்டு
செய்ய வேண்டிய இக்
ல், தென்னிந்தியாவில்,
டை மேலும் பிரிக்க
மென்று ஒரு கிளர்ச்சி
ள்ளது. இந்த இருப
றாற்றாண்டில் இப்படி
ல் இதைவிட மடமை
இருக்க முடியாது.

தான்

உங்களிடம் யாராவது
சினால் அந்தப் பேச்சு
செவிகளில் புகாவண்

ணம் உங்கள் செவிகளைப் பொத்திக்கொள்ளுங்கள்."

**நியாயந்தானே!**

டாக்டர் சுப்பராயனின் இன்றைய அரசியல் குரு ஆச்சாரியார் அன்றோர் நாள் சென்னை முதலமைச்சராய் இருந்த போது கூறினார், "எனக்குச் செவி ஒன்று கேளாது. என்னை எவரேனும் எதிர்த்தால் அவர் பக்கம் திருப்புவேன் அந்தக் கேளாத காதினை" என்று! குரு, தன் காது கேளாது என்று சொன்னால், சிஷ்யர், பிறர் காதுகளையும் கேளாதனவாக்க முயல்வது முறை தானே! ஆகவே டாக்டர் சுப்பராயன் கூறிய இந்த வாசகத்தில் வியப்பதற்கொன்று மில்லை. ஆனால் வியப்பு என்னவென்றால் இதே

**குரு—சிஷ்ய**

முறையைத்தான் என் வீட்டுப் புறக்கடையில் வாழ்ந்து வரும் பழம் பூனை ஒன்றும் கையாள்கிறது. சிற்சில சமயங்களில் அது திடீர் திடீரெனத் தன் கண்ணை மூடிக் கொண்டு, மெள்ள நடந்து வந்து, அடுக்களையில் உள்ள பலகாரங்களை "ருசி" பார்க்கத் தொடங்குகிறது. இது ஏன் என்று எனக்கு நீண்ட நாட்களாகத் தெரியாமல் இருந்தது. கடைசியில்,

**உளநூல் வல்லார்**

ஒருவர் கூறினார், பூனை, தன் கண்ணை மூடிக் கொண்டால் உலகமே இருண்டு விட்டது என்று எண்ணிக் கொள்ளுமாம். அந்த 'இருட்டு வேளை'யில், தான் திருடினால், பிறர் காணார் அதனை என்ற நினைப்பாம் அதற்கு. இந்தப்

**பூனையின்**

கதைபோல் அல்லவா இருக்கிறது டாக்டர் சுப்பராயன் கூறும் யோசனை! யாரோ சிலர் தம் காதைப் பொத்திக் கொண்டால் திராவிடஸ்தான குமுறல் அடங்கிவிடுமோ! அது என்ன காளான் காலையில் மலர்ந்து மாலையில் அழிந்து விட! ஆயிரமாயிரம் இளைஞர்களின் இருதய கீதம் அல்லவா அது! வாழ்ந்து கெட்ட சமுதாயம் ஒன்று, தன்னைத்தான் உணர்ந்து கொண்ட காரணத்தால்

**தலை நிமிர்ந்து**

நின்று, தன சிறப்பைச் சிதைத்தாரின் செல்வாக்கைச் சிதைத் தொழித்து விட்டு, தன் இனம் வாழ வகுக்கும் வழி அல்லவா அத் திராவிட நாட்டுப் பண்! "செவி மூடு விழா"க்களும் வேறு செப்பிடு வித்தைகளும் திராவிட நாடு திராவிடருக்கே என்று தென்னாட்டில் அதிர்ந்தெழும் அந்த வீர ஒலியை.


**அடக்கவா**

முடியும்? முடியாதே! அது முடியுமானால், கடல் அலையைக் கைத்தடிகொண்டு அடக்குவதும் முடியுமே! பசிப் பிணியைத் துப்பாக்கி வேட்டு கொண்டு தீர்த்துக் கட்டுவதும் இயலுமே! தொழிலாளர் குமுறலை 144 உத்தரவுகளும் 124 A-க்களும் தணித்து விடல் நிகழுமே! ஞாயிற்றின் தோற்றத்தையும் வெண்ணிலவின் பவனியையும் தடுத்து விடல் ஆகுமே! அவை அனைத்தும்

**நடவாத**

செயல் எனில் இன்பத் திராவிடம் உருவாதலை மட்டும் தடுத்து விடல் ஒல்லுமோ? அரசியல் உலகில் பழுத்த பழமாகிய டாக்டர் சுப்பராயனிடமிருந்தா இந்த உதவாக்கரை யோசனை பிறப்பது!......

(12-ம் பக்கம் பார்க்க)




[சென்ற இதழின் தொடர்ச்சி]

சத்திர சிகிச்சை செய்து ஓர் உடலில் இருந்த இரு உயிர்கள் இரண்டாகப் பிரிக்கப் பட்டன. குழந்தையின் மெல்லிய ஸ்பரிசத்தை உணர்ந்து கர்வம் கொண்ட அதன் தாய் இன்னும் சில மணி நேரத்திற்குள் இந்த உலகத்தை விட்டே போய்விடப் போகிருள் என்பதை எண்ணும் போது இந்தப் பரந்த உலகமும், மேல் உள்ள வான் வெளியும் என்னைச் சுற்றிச் சுழல்வது போல இருந்தது. நான் கண் கலங்கிக் கதிகலங்கி நின்றேன்.

கௌரி நல்உணர்வோடு படுக்கையில் கிடந்தாள். அதிக ரத்தப் போக்கிஞல் முகம் வெண்மையாக வெளுத்திருந்ததும் ஒரு விதத்தில் அழகாகத் தான் இருந்தது. மற்ற நாட்களை விட அன்று மிக அமைதியாகக் காணப் பட்டாள். இந்தச் சூது நிறைந்த துட்ட உலகினின்று தனக்கு விடுதலை கிட்டிவிட்டது என்ற மகிழ்ச்சியினுலோ என்னவோ அவ்வளவு அமைதியாக விளங்கிஞள்.

என்னை அருகில் அழைத்தாள். சென்றதும் என் மடி மீது தன் தலை வைத்து ஒரு கையால் என் கழுத்தைச் சுற்றியவாறு குழந்தையையே சற்று நேரம் நோக்கிஞள். அடுத்த கணம், புன்னகை பூத்த அவள்முகத்தில் சிந்தனையின் கீறல்கள் பல விழுந்தன.

"நான் மன அமைதியுடன் பிரிவதற்கு உங்கள் விருப்பம் உண்டல்லவா!" என்ருள்.

"என்ன? சொல்லு" என்றேன்.

"எனது கடைசி விருப்பம் ஒன்று. இந்த மடி மீதே—எந்த மடி மீது சாய்ந்ததால் ஏழ்மையையும் தந்தையின் பிரிவையும் உலகத்தின் அவதூறையும் மறக்க முடிந்ததோ—அந்த மடிமீதிருந்தே உயிரைவிட விரும்புகிறேன். இறக்குமுன் கடைசி முறையாகத் தங்களின் இனியகுழல் இசையைக் கேட்க விரும்புகிறேன். மக்கள் இறக்கும் தறுவாயில் பகவத் கீதையையோ திருவாசகத்தையோ விவிலிய நூலையோ மற்ற மதக் கோட்பாடுகளையோ கேட்டுக் கொண்டே இறந்தால் நற்கதியடைவார்கள் என்று கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். அதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனுல் இறக்கும் தருணத்தில் இசையை விரும்புகிறேன். மறுக்காதீர்கள்" என்ருள்.

"இந்தச் சமயத்திலா இசை', என்று கூறி விக்கினேன்.

"பாவம்! என்னுல் தானே இவ்வளவு கஷ்டங்களுக்கும் ஆளானீர்கள். இனி உங்களுக்கு விடுதலை கிட்டிவிட்டது என் பிரிவால். காலதாமதம் செய்யாதீர்கள். ஊதுங்கள் குழல் கொண்டு, அந்த **சா-வே-ரி ராகத்தை.**"

மரணம் அவளைத் தழுவிட விரைந்தோடிவரும் வேளைதான் அது. என் வாழ்க்கையில் இன்பத் தேன் பிலிற்றி வந்த அந்த வண்ணத் தாமரையைக் காலக் கள்ளன் பறித்தெடுத்துப் போகத் துணியும் நேரம்தான் அது. தாங்கரிய துக்கத்தால் என் நெஞ்சம் துடிதுடித்துத் தேம்பித் தேம்பி அழும் சமயம் தான் அது. எனக்கும் இன்ப வாழ்விற்கும் இடையே இருந்த ஒரே ஒரு பாலம் அறுபட இருக்கும் காலம்தான் அது. ஆனுல் அதே காலத்தில் தான் கௌரி என்னை சாவேரி

ராகம் இசைக்கச் சொன்
இசை பாடும் நேரம் அல்ல
வேதனையால் வெம்பும் உள்
ளிருந்து இசையின் இ
எங்கிருந்து தோன்றும்?
தோன்றத்தான் வே
என்ருள் கௌரி. சரி என்
குழல் எடுத்தேன். சா
பண் பிறந்தது.

என் இதய தேவி குழலிசை
கேட்டுக் கேட்டுப் பூ
போனுள். என் குழலி
இசை எழும்ப எழும்ப சு
சோர்ந்துபோயிருந்த அவள்
தில் களிப்பு, குதித்துக் கு
கூத்தாடலாயிற்று. நான்
பாடிக்கொண்டே போ
சோர்வும் சோகமும் கொ
விட்டு மெல்ல மெல்ல அ

(9-ம் பக்கம் பார்க்க)

(11-ம் பக்கத் தொடர்ச்

## ஒரு வேளை,

அமைச்சர் சுப்பராயன்
படிச் சொல்லாமல் இ
வேறு யாரேனும் சொன்
அவர் பேரில் போட்டு வி
களோ பத்திரிகையாளர்கள்

## இருக்காது

இருக்காது, அப்படி
லாம் இருக்காது.
அவர்களே தான் இ
சொல்லி இருக்க வே
தன் குரு ஆச்சாரியார்
கதை கூறுவது கண்டு,
அதுபோல் கூறிப் பார்
என்று எண்ணி இரு
அந்த எண்ணத்தின்
தான் இந்த

## விபரீதத்தில்

முடிந்திருக்க வே
ஆமாம், என்ன இரு
எல்லாரும் ராஜாஜியாய்
தென்ருல் அது நடக்கு
யமா? குட்டிக் கதை
என்ன சாமானியமான
அவ்வளவு எளிதில்
கூடிவர!

—

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoli
at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B.A.